செ.வெ.எண்.97 நாள்:31.07.2017.

**திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 15.08.2017 அன்று சுதந்திர தின விழா கொண்டாடுதல் தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

திருநெல்வேலியில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 15.08.2017 அன்று சுதந்திர தின விழா கொண்டாடுப்படுவது தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.07.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 15.08.2017 அன்று சுதந்திர தின விழா பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதானத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. ஆயுதப்படை மைதானத்தினை தயார் நிலையில் வைக்க வேண்டும். விழாவின் போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் துறையினர் மேறகொள்ள வேண்டும். விழாவிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தேவையான குடிநீர் வசதிகளையும், தற்காலிக கழிப்பறை வசதிகளையும் மாநகராட்சி மூலம் செய்திட வேண்டும். அணிவகுப்பு மரியாதை தொடர்பான பயிற்சிகளை காவல் துறையினர் சிறப்பாக செய்திட வேண்டும். சுதந்திரப் போராட்ட தியாகிகளை கௌரவித்து, பொன்னாடை அணிவித்து மரியாதை செய்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். விழாவில், பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்திட முதன்மை கல்வி அலுவலர்கள் அவர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 15.08.2017 அன்று சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடிட துறை அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக செய்து, கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் இவ்வாண்டு சிறப்பான முறையில் சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் நடைபெற ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.தவமணி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.